**தலைப்பு 328 – மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஒக்டோபர் 18 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்டெம்பர் 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் , மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க

கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம்ஹ இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 மூலதனச் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் செலவுகள் கூற்றில் மூலதனச் செலவுகளின் மொத்த தேறிய ஒதுக்கங்களின் கூட்டுத்தொகை ரூபா 37,779,000 ஆக இருந்த போதிலும் அதன் கூட்டுத்தொகை ரூபா 36,397,000 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மூலதனச் செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,382,000 ஆக நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தவறுதலாக அது குறிப்பிடப்பட்டிருந்ததுடன் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் தொடர்பான இணக்கக் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்பண "பீ" கணக்கில் சேவையில் உள்ள 03 அதிகாரிகளின் அறவிட வேண்டிய மிகுதிப் பட்டியலில் காட்டப்பட்டுள்ள மிகுதிகள், உறுப்பினர் கடன் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள மிகுதிகளுக்கிடையே ரூபா 18,462 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அந்தத் தாமதங்கள் தற்போது சரி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் சரியாக குறித்துக் கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தில் 2020 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டிய மிகுதியாக காட்டப்பட்டுள்ள அதிகாரிகளின் அறவிட வேண்டிய ரூபா 133,870 ஆன மிகுதி உறுப்பினர் கடன் பதிவேட்டில் காட்டப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக கடன் பதிவேட்டில் குறிப்பிடப்படாததுடன் அது குறிக்கப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | உறுப்பினர் கடன் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் மிகுதிகளின் பிரகாரம் ஒரு அதிகாரியின் கடன் மிகுதி ரூபா 166,000 ஆனது கூடுதலாகவும் மேலும் இன்னொரு அதிகாரியின் கடன் மிகுதி ரூபா 3,750 ஆனது குறைவாகவும் முற்பண "பீ" கணக்கில் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அதைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 05 மூலதனச் செலவு விடயங்கள் மற்றும் 03 மீண்டெழும் செலவு விடயங்களுக்காக மேலதிக ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தமையால் ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 1,333,944 ஆன மிகுதி அச்செலவு விடயங்களுக்கான தேறிய ஒதுக்கங்களில் நூற்றுக்கு 11 இலிருந்து நூற்றுக்கு 74 வரையான வீச்சில் காணப்பட்டது. | நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்டதன் படி செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை. | சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு செலவு மதிப்பீடு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

2.2 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் வழிகாட்டி இலக்கம் 06 இன் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் அறிக்கையிடப்படாத எவ்வித பொறுப்பும் 2021 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட முடியாத போதிலும் அதற்கு இணங்காது 2020 ஆம் ஆண்டில் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றமைக்கான கூட்டுத்தொகை ரூபா 2,726,637 இற்காக 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் அச்செலவுகள் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களின் பெறுமதி உள்ளடக்கப்படாததுடன் சில பெறுமதிகள் தாமதத் தவறுகள் காரணமாக உள்ளடக்கப்படாமையை ஏற்றுக் கொள்கின்றேன். | பொறுப்புக்கள் தொடர்பான சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்குகளில் எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் செய்யப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டிய போதிலும் அம்முறைமையின் பயனுறுதி தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை பயனுள்ளதாக பேணப்படுவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியுள்ள போதிலும், அம்மீளாய்வு ஒன்று எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் அவ்வாறு மீளாய்வு செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்துப் பேணப்பட்டு வருவதுடன் அது தொடர்பாக காலாண்டு ரீதியாக நடாத்தப்பட்டு வருகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்காக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படும். எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதன் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்பண “பீ” கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் சேவையிலிருந்து விலகிச் சென்ற அதிகாரி ஒருவரின் அறவிட வேண்டிய ரூபா 15,835 மிகுதி இற்றைவரையில் முற்றாக அறவிடப்படாததுடன் அது தொடர்பாக எவ்வித | சேவையிலிருந்து விலகிச் சென்ற அதிகாரியின் அறவிட வேண்டிய மிகுதி அவரின் பிணையாளியிடமிருந்து தற்போது தவணை அடிப்படையில் அறவிடப்பட்டுள்ளது என்பதுடன் ஏனைய கடன் தவணைகள் தற்போது அறவிடப்பட்டுள்ளது. | முறையாக நிலுவைக் கடன் தவணைகள் அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறிப்பொன்றும் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வில் காட்டப்பட்டிருக்கவில்லை. தற்போது சேவையாற்றுகின்ற 03 அதிகாரிகளின் அறவிடபப்ட வேண்டிய 02 மாதங்களுக்கான ரூபா 16,958 ஆன கடன் தவணைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சினால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,500,000 பெறுமதியான மோட்டார் வாகனம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஏனைய நிறுவனங்களிலிருந்து மாற்றப்பட்டவைகளில் குறிப்பிடப்படவில்லை. மேலும் இம்மோட்டார் வாகனத்தின் உரிமை திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இவ்வாகனம் தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளதால் அது நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் குறிப்பிடப்படவில்லை. இவ்வாகனத்தை ஒப்படைக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் அதைச் செய்ய முடியாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் உரிமைகளைத் தீர்த்து வைப்பதுடன் மற்றும் சொத்துக்கள் முறையாக கணக்குகளில் எடுக்கப்படுவதோடு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் திணைக்களத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான குறிகாட்டிகளின் வெற்றி இலக்குகளின் முன்னேற்றம் நூற்றுக்கு 19 இலிருந்து நூற்றுக்கு 66 வீதத்திற்கிடையிலான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 தொற்று நோய் காரணமாக நாடு மூடப்பட்டமை மற்றும் காலத்திற்குக் காலம் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை தொடர்ந்தும் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமை, தேர்தல் காலங்களில் வேலை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்காகத் தேவையான |

| | | |
|---|---|---|
| | நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்படாமை போன்ற காரணங்களினால் மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடைவதில் பின்னடைவு ஏற்பட்டது. ஆனால் இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டியிருப்பதால் Zoom தொழிநுட்பத்தினூடாக Virtual Programme செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்திலான 07 வெற்றிடங்கள், மூன்றாம் மட்டத்தில் 04 வெற்றிடங்கள், இரண்டாம் மட்டத்தில் 80 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 04 வெற்றிடங்கள் உட்பட மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 95 ஆகக் காணப்பட்டது. | சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்டத்தில் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்காக பொது நிர்வாகச் செயலாளர் மற்றும் ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 56 தொழில் வழிகாட்டல் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காட்டப்பட்டிருந்த போதிலும், அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட கள அலுவலகர்களுக்கான பதவியுயர்வு நடைமுறையில் தற்போதுதுள்ள அலுவலகர்களுக்கு உரித்தாகுமாறும் மற்றும் பின்னர் இரத்துச் செய்யப்படுவதற்குமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால் மீண்டும் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறாது. அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் தொடர்பாக ஒன்றிணைந்த சேவைப் பணிப்பாளர் நாயத்திற்குத் தெரியப்படுத்தி உள்ளதுடன் தற்போது 18 பேர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். | தேவைக்கேற்ப திணைக்களத்தின் ஊழியர் பற்றாக்குறை நிரப்பப்பட வேண்டும். |